# *புனித அத்தனாசியுஸ் (297 – 373)*

இவர் ஞானமும் ஆழ்ந்த பக்தியும் உள்ளவர். இவர் முதலில் அலெக்சாந்திரியா நகர் பிதாப்பிதாவின் செயலாளராக இருந்தார். பின்னர் அந்நகரின் பிதாப்பிதா ஆனார். 46 ஆண்டுகளாக இவர் ஆயராக இருந்ததில் 17 ஆண்டுகளை பரதேசத்தில் செலவழித்தார். ஐந்து முறை நாடு கடத்தப்பட்டார். எதிரிகள் இவருக்கு ஓயாது தொல்லை கொடுத்து வந்தார்கள். இவரோ பழிக்குப்பழி வாங்கவில்லை. அன்பால் எதிரிகளை வழிக்குக் கொண்டு வர முயன்றார். கிறிஸ்துநாதர் கடவுள் அல்ல என்று சாதித்த ஆரிய பதிதர்களை இவர் வீரத்துடன் எதிர்த்தார். இதனாலேயே இவருக்கு இத்தனை உபத்திரவங்கள் வந்தன. நான்கு பேரரசர்கள் ஒருவர் பின் ஒருவராய் இவரை எதிர்த்தார்கள். அனைத்தையும் இவர் கிறிஸ்துநாதருக்காக பொறுமையுடன் சகித்தார்.

**சிந்தனை:**

தீமையானதை செய்யாமலிருந்தால் மட்டும் போதாது, நன்மையானதை செய்யாதிருப்பதும் தீமையே. (புனித அத்தனாசியுஸ்)

**செபம்:**

இயேசுவே, நாங்கள் அனைத்தையும் உமக்காக சகிக்கும் வரந்தாரும்.